விருத்தாசலம் நகரில் அரசுக்குச் சொந்தமான டான்காப் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தற்போது நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது. எனவே, எவ்விதத் துர்நாற்றமும் வெளிவர வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் கோவிந்தசாமி (குறுக்கீடு), திரு. ஜி.கே. மணி,

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் நகரிலே டான்காப் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளிவரக்கூடிய கழிவுப் பொருளாலே அங்கே துர்நாற்றம் இருக்கிறது. துர்நாற்றம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது விந்தையாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை மணி, தொழிற்சாலை மூடப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்.

திரு. ஜி.கே. மணி: ஆகவே, மீண்டும் அது திறக்கப்படுகிற நேரத்திலே வெளியேற்றப்படக் கூடிய அந்தக் கழிவுப் பொருளைச் சுத்திகரிப்புச் செய்து அங்கே நாற்றம் இல்லாமல் இயங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை இயக்கப்படுவதற்குமுன், துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்தத் தேவையான சாதனங்களைப் பொருத்தி இயக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது மேற்படி டான்காப் நிறுவனத்தை நிரந்தரமாக மூடுவதற்கு 30-11-2001 நாளிட்ட அரசாணை எண் 345-ல் தக்க உத்தரவை அரசின் வேளாண்மைத் துறை பிறப்பித்துள்ளது. எனவே, இனிமேல் மேற்படி நிலையத்திலிருந்து எவ்விதத் துர்நாற்றமும் வர வாய்ப்பு இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

93—

பால் குளிரூட்டும் நிலையம்

***7414—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2002 ஏப்ரல் 4]

(அ) புவனகிரி தொகுதியில் செயல்படாத பால் குளிரூட்டும் நிலையத்தைச் செயல்பட வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இந்தச் சிறப்பு வாய்ந்த மாமன்றத்தில் பேசுகிற வாய்ப்பளித்த, நானும், என் குடும்பமும் போற்றி வணங்கும் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களிலே என் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

விடை—

(அ) புவனகிரி தொகுதியில் செயல்படாத பால் குளிரூட்டும் நிலையம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்குப் பதில் எழவில்லை.

முற்பகல் 11-05

திரு. பி.எஸ். அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுகளில் 50 ஆண்டு கால அரசியல் அனுபவம் பெற்றுவிட்ட அன்புத் தாயை வணங்குகிறேன். எனது புவனகிரி தொகுதி முற்றிலும் கிராமப் பகுதிகளை உள்ளடக்கிய தொகுதியாகும். அந்தத் தொகுதியில் சேத்தியாத்தோப்பு பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 1984 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. நான்கு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள அந்தப் பால் குளிரூட்டும் நிலையம் கடந்த ஆட்சியில் நிர்வாகச் சீர்கேட்டால் பாதிப்படைந்து, நலிவடைந்துள்ளது. சேத்தியாத்தோப்பு பகுதியைச் சுற்றி நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. அங்குள்ள கிராம மக்கள், குறிப்பாகப் பெண்கள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கி, பால் கொள்முதல் செய்வதன் மூலம் தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவேண்டுமென்ற இலட்சியத்தின் அடிப்படையில் தொடங்கப்பட்ட அந்தப் பால் குளிரூட்டும் நிலையத்தில் இன்றைய சூழ்நிலையில் நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கொள்ளளவை 30 ஆயிரம் லிட்டராக*

[2002 ஏப்ரல் 4

உயர்த்துவது கழக அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதியில் சேத்தியாத்தோப்பு பால் குளிரூட்டும் நிலையத்தின் பால் குளிர்விக்கும் திறன் அளவீடான 10 ஆயிரம் லிட்டர் என்பதை மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆணையின் அடிப்படையிலே 30 ஆயிரம் லிட்டராக அதிகப்படுத்துவதற்கு ஏதுவாக திட்டப் பணிகள் மேற்கொள்ள, ஒன்றிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்குளிரூட்டும் நிலையத்தினை முழுத்திறனுடன் தொடர்ந்து நல்ல முறையிலே இயக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் விழுப்புரம் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, திரு. கோவை தங்கம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

94—

சுற்றுலாத் தலம்

***899—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பகுதியில் உள்ள புல்மலையை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நான் வணங்கும் தமிழகத்தின் காவல் தெய்வம், தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் வணங்கி என் கன்னிப் பதிலைத் தருகின்றேன்.

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம் வால்பாறை பகுதியில் உள்ள புல்மலை பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் உள்ளதால்